# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 31.08.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் அருளால் இங்கிலாந்தின் ஆண்டு மாநாடு வரவிருக்கிறது இன்ஷா அல்லாஹ். அடுத்த வெள்ளிக்கிழமையிலிருந்து ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது இன்ஷா அல்லாஹ். இறையருளால் பல்வேறு துறைகளின் பணியாளர்கள் வழக்கம் போல் அதிகமான நேரத்தை செலவு செய்து மாநாட்டின் ஏற்பாட்டிற்காக பல்வேறு முயற்சிகளையும் தியாகங்களையும் செய்கின்றனர். இங்கு வரக்கூடியவர்கள், ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடியவர்கள், ஜமாஅத் அல்லாத பல்வேறு விருந்தினர்கள் ஒவ்வொரு வருடமும் வருகிறார்கள். அவர்கள், தற்காலிகமாக ஒரு சிறிய ஊரே உருவாக்கப்படுகிறது என்று ஆச்சரியப்படுகின்றார்கள். இதில் எல்லா விதமான வசதியும் இருக்கிறது. இந்த வேலை வெறும் 10, 15 நாட்களுக்குள் நடந்து விடுகிறது. வெளியில் உள்ளவர்கள் இந்த வேலைகளை – பணிகளை திறமைமிக்க ஆட்களைக் கொண்டு செய்யப்படுகிறது என்றும், இதற்காக மிகப்பெரிய தொகை செலவு செய்யப்படுகிறது என்றும் கருதுகின்றனர். ஆனால் அவர்களிடம் இந்த அனைத்தையும் அஹ்மதி தொண்டர்கள் தான் செய்தார்கள் என்றும் தனது அன்றாட வாழ்வில் இப்பணிகளுடன் தொடர்பில்லாத மக்கள்தான் இப்பணிகளை செய்தார்கள் என்றும் கூறும் போது, நான் கூறியது போன்று இந்த விசயம் அவர்களுக்கு மிகவும் ஆச்சரியம் ஊட்டக்கூடியதாக உள்ளது. சில வேலைகளை பணம் செலவு செய்து மற்றவர்களைக் கொண்டும் செய்யப்படுகிறது. ஆனால் அல்லாஹ்வின் அருளால் 70 அல்லது 72 சதவிகித பணிகள் தன்னார்வத் தொண்டர்கள் மூலமே நிறைவு பெறுகின்றன. இதில் வயது முதிர்ந்த ஆண்களும் உள்ளனர்; இளைஞர்களும் உள்ளனர்; சிறு பிள்ளைகளும் உள்ளனர்; பெண்களும் உள்ளனர்.

பிறகு இறை அருளால் ஜல்ஸாவின் நாட்களிலும் இதே பணியாளர்கள் தான் ஜல்ஸாவின் முழு அமைப்பையும் கவனிக்கின்றார்கள். ஒரு ஆர்வத்துடனும், உணர்வுடனும் கவனிக்கின்றார்கள். எந்தவித நிர்பந்தமும் அவர்களுக்கு கிடையாது. இவர்கள் எதனால் இவ்வாறு கவனிக்கின்றார்கள் என்றால், எல்லாவிதமான பணிகளையும் கண்ணியக் குறைவாகக் கருதாமல் செய்கிறார்கள் என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதை ஒரு கண்ணியமாக கருதுவதனாலேயே ஆகும்.

எனவே, இந்த அனைத்தையும் செய்யக்கூடிய மக்களுக்கு இது மாபெரும் பெருமையாகும். இவர்கள் பல வருடங்களாக இதனை செய்து வருகின்றார்கள். மிகவும் சிறந்த முறையில் இதனை செய்கின்றார்கள். வழக்கத்தின்படி ஜல்ஸாவிற்கு ஒரு வாரத்திற்கு முன்பு நான் பணியாளர்களுக்கு அவர்களது பணியின் முக்கியத்துவம் மற்றும் விருந்தோம்பலின் முக்கியத்துவம் போன்றவற்றை கூறி வருகின்றேன். கவனமூட்டியும் வருகின்றேன். எனவே நான் இன்று இதனைப் பற்றி சிலவற்றைக் கூறுவேன். ஏனென்றால், நினைவூட்டுவதால் இன்னும் அதிகமான கவனம் ஏற்படுகிறது. சில சமயங்களில் சில சம்பவங்கள், சில அறிவுரைகள் புதியதொரு உணர்வையும், ஆர்வத்தையும் ஏற்படுத்துகின்றன. இந்த சிறப்பு இந்தக் காலத்தில் U.K. உடைய ஜல்ஸாவிற்கு மட்டும் தான் உள்ளது. இந்த ஜல்ஸாவில் பணிபுரியக்கூடிய பணியாளர்களுக்கும் இந்த சிறப்பம்சம் உரியதாகும்.

குறிப்பாக விருந்தினர்களுக்கு தொண்டாற்றக் கூடியவர்களுக்கு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி சில விசயங்கள் கூறப்படுகின்றன. இது U.K. வில் பணியாற்றக்கூடிய பணியாளர்களின் ஆர்வம் மற்றும் உணர்வில் ஏதோ குறைபாடு உள்ளது என்பதால் அல்ல. உலகில் மற்ற இடங்களிலுள்ள பணியாளர்கள் மிகுந்த ஆர்வத்துடனும் உணர்வுடனும் பணிபுரிகிறார்கள் என்பதால் அல்ல. மாறாக, U.K. ஜல்ஸாவின் முக்கியத்துவம், உலகில் மற்ற நாடுகளிலுள்ள ஜல்ஸாக்களின் முக்கியத்துவத்தை விட அதிகமானதாகும். தற்போது கடந்த 27, 28 வருடங்களாக இந்த முக்கியத்துவம் இருந்து வருகிறது. ஏனென்றால் இந்த ஜல்ஸா தற்போது உலகளாவிய ஜல்ஸாவாக உருவெடுத்து

விட்டது. உலகின் எந்தவொரு நாட்டின் ஜல்ஸாவிலும் காலத்தின் கலீஃபா கலந்து கொள்வது அவசியமானது கிடையாது. பாகிஸ்தானில் ஜல்ஸாக்கள் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்ட பின்னர், இங்கு ஜல்ஸாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பாகிஸ்தானில் ஜல்ஸாக்கள் தடை செய்யப்பட்டதன் காரணத்தால், பாகிஸ்தான் அஹ்மதிகளின் பூமி சுருக்கப்பட்டதன் காரணத்தால் காலத்தின் கலீஃபா இங்கு வர வேண்டிய நிலை ஏற்பட்டதால் U.K. ன் இலண்டன் தற்போது தலைமையகமாக ஆக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, நான் கூறியது போன்று ஏறக்குறைய கடந்த 28 வருடங்களாக காலத்தின் கலீஃபா அவர்கள் ஆண்டு ஜல்ஸாவில் கலந்து கொள்வது ஒரு முக்கிய அம்சமாக ஆகி விட்டது.

இதன் காரணமாக உலகின் மூளை முடுக்குகளிலிருந்து ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு அஹ்மதியும், ஜமாஅத் அல்லாத விருந்தினர்களும் வருகின்றனர். உலக அஹ்மதிகளின் மத்தியில், நமது ஜமாஅத் அல்லாதவர்களின் மத்தியில் U.K. உடைய ஆண்டு மாநாடு தற்போது U.K. உடைய ஆண்டு மாநாடாக மட்டும் இல்லை. மாறாக நான் கூறியது போன்று தலைமையக ஆண்டு மாநாடாக கருதப்படுகிறது. காலத்தின் கலீஃபா இங்கு வசித்து வருவதுதான் இதற்கு காரணமாகும்.

எனவே இந்த வகையில் இங்குள்ள ஏற்பாடுகளும் அதன் அளவும் விரிவடைந்து விட்டது. மேலும் இங்கு வரக்கூடிய விருந்தினர்களின் எதிர்பார்ப்புகளும் சற்று அதிகமாக இருக்கிறது. இதன் காரணமாக எனக்கும் இங்குள்ள ஏற்பாட்டாளர்களுக்கும் விருந்தினர்களுக்கு சரியான முறையில் விருந்தோம்பல் செய்ய வேண்டும்; மாநாட்டு ஏற்பாடுகள் எல்லா வகையிலும் சரியானதாக இருக்க வேண்டும் என்ற கவலை அதிகம் இருக்கிறது. இதற்காக முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகிறது. எந்த அளவு சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்ய முடியுமோ அந்த அளவு செய்ய வேண்டும். இதன் காரணமாக சில சமயங்களில் செலவுகளும் அதிகமாகி விடுகின்றன. U.K. ஜமாஅத்தின் பட்ஜெட் இதற்கு போதுமானதாக இருப்பதில்லை அல்லது அதற்குள் இதனை செய்ய முடியாததாக இருக்கிறது. மாநாட்டு செலவின் பெரும் பகுதியை U.K. ஜமாஅத் தான் ஏற்றுக் கொள்கிறது. எனினும், சில சமயங்களில் தலைமையகம் 30, 35 சதவிகிதம் பங்கு செலவுகளுக்காக கொடுக்கப்பட வேண்டியது வருகிறது அல்லது ஏற்றுக் கொள்ள வேண்டியது இருக்கிறது.

இதை நான் கூறக் காரணம், சில சமயங்களில் சில மக்கள் U.K. ஜமாஅத்தின் மீது தலைமையகம் அதிகமான சுமையை சுமத்துகிறது என்று கூறுகின்றார்கள். ஆனால் இங்குள்ள ஜமாஅத்தின் பெரும்பான்மை தியாகங்கள் செய்யக் கூடியதாகும். ஜல்ஸாவின் அருள்களின் காரணமாக அனைத்து செலவுகளையும் தாமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றது. U.K. ஜமாஅத் விரும்புகின்றது அல்லது இதனைத்தான் விரும்பும். நானும், இதனைத் தான் விரும்பும் என்று நம்புகிறேன். ஆனால் நிம்மதியின்மை ஏற்படுத்தக்கூடிய சிலர் நிம்மதியின்மையை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். நான் தலைமையக மாநாடாகும் என்று ஏற்கனவே கூறினேன். எனவே தலைமையகம் ஒரு சில பகுதியை இதில் கொடுக்க வேண்டும் என்பதை கடமையாக கருதுகின்றது. எவ்வாறிருப்பினும் U.K. உடைய ஆண்டு மாநாடு உலகின் பார்வையில் ஒரு தலைமையக மாநாடாகும் என நான் கூறினேன்.

எனவே இங்குள்ள பணியாளர்கள் மற்றும் அமைப்பாளர்களின் பொறுப்பும் அதிகமாகிறது. எனக்கும் இதனைப் பற்றிய கவலை இருக்கிறது. எனவே ஜல்ஸாவிற்கு முன்பு இதன் பக்கம் கவனமூட்டப்படுகிறது. பணியாளர்கள் எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். உலகிலுள்ள அனைத்து அஹ்மதிகளின் பார்வை மேலும் இது தொடர்பாக அஹ்மதிகளுடன் தொடர்பு கொண்டுள்ளவர்களின் பார்வை அதாவது பல்வேறு நாடுகளிலிருந்து ஜமாஅத் அல்லாதவர்கள் விருந்தினர்களாக வந்திருப்பார்கள்; சிலர் தலைவர்களாக இருப்பார்கள். கண்ணியத்திற்கு உரியவர்களாக இருப்பார்கள்; அவர்களது பார்வை ஆகியவை ஜல்ஸாவின் ஏற்பாட்டின் மீதும் பணியாளர்களின் மீதும் இருக்கின்றது. எனவே பணியாளர்களின் நடத்தை, அவர்களது பணியின் தரம், அவர்களது ஒழுக்கம், அவர்கள் விருந்தோம்பும் தரம் போன்றவை மனிதனது சக்திக்கு ஏற்றாற்போல் மிகவும் சிறந்ததாக இருக்க வேண்டும். இதற்காக ஒவ்வொரு பணியாளரும், பல்வேறு பொறுப்புகள் கொடுக்கப்பட்ட ஆணும், பெண்ணும், பிள்ளைகளும் இதற்காக முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். எப்போதும் ஜல்ஸாவிற்குப் பிறகு குறிப்பாக வெளியிலிருந்து வரக்கூடியவர்கள் இங்குள்ள பணியாளர்களின் விருந்தோம்பலை புகழ்ந்து வந்துள்ளார்கள். இந்த வருடமும், எப்பொழுதும் இந்த முயற்சியைத்தான் செய்ய

வேண்டும். ஒருபோதும் இந்தத் தரத்தை கீழே விழ விட்டு விடக் கூடாது. மாறாக ஒவ்வொரு வருடமும் தரம் உயர வேண்டும். நம்பிக்கையாளரின் பாதம் பின்னோக்கி செல்லாது. மாறாக, முன்னேறிக் கொண்டே செல்லும். எப்பொழுதும் முன்னேற்றத்தின் பக்கம் செல்ல வேண்டும்.

விருந்தோம்பல் என்பது ஒரு சாதாரண பண்பு கிடையாது. மாறாக எப்படிப்பட்ட நன்மை என்றால் திருக்குர்ஆனிலும் இதனைப் பற்றி கூறப்பட்டுள்ளது. நம்பிக்கையாளர்களுக்கு நன்மையில் முன்னேற வேண்டும் என்ற கட்டளையும் உள்ளது. அவற்றுள் ஒன்று விருந்தோம்பல் ஆகும். உலக மக்கள் செய்யக்கூடிய விருந்தோம்பல் என்ற ஒன்று உள்ளது. நல்லொழுக்கமுடைய ஒவ்வொருவரும் விருந்தோம்பல் செய்து வருகின்றனர். அதற்கும் மிகுந்த முக்கியத்துவம் உள்ளது. இறைவனின் படைப்பினங்களுக்கு தொண்டாற்றுவதன் காரணமாக நிச்சயமாக இப்படிப்பட்ட நபர் நன்மைக்குரியவர் ஆவார்.

ஆனால் ஒரு செயல் தூய வடிவில் இறைவனுக்காக மட்டும் செய்யப்படும் போது, தனது சொந்த விருந்தினர்களாக இல்லாமல், அன்பிற்குரிய சொந்தங்களாக இல்லாமல், எந்தவித உலக நோக்கமும் இல்லாமல், தன்னலம் இல்லாமல் இறைவனது விருப்பத்தினைப் பெறுவதற்காக விருந்தினர்களுக்கு உபசரிப்பு செய்யும் போது நிச்சயமாக அப்படிப்பட்ட விருந்தோம்பல் இறைவனிடம் இரட்டிப்பு நன்மையைப் பெற்றுத் தரக் கூடியதாகும்.

நான் கூறியது போன்று இறைவனும் திருக்குர்ஆனில் விருந்தோம்பலைப் பற்றி கூறியிருக்கின்றான். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுடைய சம்பவம் இடம்பெற்றுள்ளது. அவர்களின் விருந்தோம்பலின் சிறப்பைப் பற்றி அல்லாஹ் குறிப்பாக கூறியிருக்கின்றான். அதாவது விருந்தினர்கள் வந்தவுடன் அவர்கள் செய்த முதல் வேலை அவர்களுக்கு கிடைத்த வாய்ப்பிற்கேற்ப அங்கிருந்த சிறந்த உணவை விருந்தினர்களுக்கு கொடுத்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி கிடைத்த போது, பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அதன் மூலம் பயம் ஏற்பட்டது. ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் அன்னாரின் கூற்றைக் கேட்டதும், உடனே எந்தவித தயக்கமும் இல்லாமல் பெருமானார் (ஸல்) அவர்களது சிறப்பம்சங்களை எடுத்துரைத்தார்கள். பிறகு இப்படிப்பட்ட சிறப்பினை கொண்டுள்ள தங்களை அல்லாஹ் எவ்வாறு வீணாக்குவான்? அல்லது தங்கள் மீது எவ்வாறு கோபப்படுவான் என்றார்கள். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் கூறிய பண்புகளில் பெருமானார் (ஸல்) அவர்களது விருந்தோம்பலைத்தான் மிகப்பெரிய பணியாக எடுத்துரைத்தார்கள்.

எனவே விருந்தோம்பல் ஒரு சாதாரண விசயம் கிடையாது. அது நபிமார்களின் பண்புகளுள் ஒரு பண்பாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு குறிப்பாக கொடுக்கப்பட்டுள்ள பணிகளுள் ஒன்று விருந்தோம்பும் பண்பாகும். விருந்தினர்கள் வருவார்கள். அப்போது கவலை அடையவும் கூடாது. சோர்வடையவும் கூடாது எனக் கூறப்பட்டது. எனவே ஜமாஅத் ரீதியிலும் ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் இந்த முக்கியமான கடமையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு உள்ளவர் ஆவார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விருந்தினர்களுக்கு எவ்வாறு கண்ணியம் அளித்து வந்தார்கள். எவ்வாறு கவனித்து வந்தார்கள் என்பதைப் பற்றிய ஒரு சம்பவத்தின் மூலம் நமக்கு நல்ல முறையில் தெரிய வருகிறது.

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உடல்நலம் சரியில்லாமல் இருந்தார்கள். உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தது. விருந்தினர்கள் வந்திருப்பதாக செய்தியைக் கேட்டவுடனேயே எழுந்து வெளியே வந்தார்கள். அப்போது கூறினார்கள். இன்று நான் வெளியில் வருவதற்கு முடியாதவனாக இருந்தேன். ஆனால் விருந்தினர்களுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகள் உள்ளன. அவர்கள் கஷ்டங்களை மேற்கொண்டு வந்திருக்கின்றார்கள். எனவே நான் அந்த உரிமையை நிறைவேற்றுவதற்காக வெளியே எழுந்து வந்தேன் என்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருந்தினர்கள் அன்னாரின் நெருக்கத்தின் மூலம் பலன் பெறுவதற்காக வந்தார்கள். அவர்கள் அன்னாரது கட்டளைக்கிணங்கவே வந்தார்கள். ஏனென்றால் அன்னார் மீண்டும் மீண்டும் என்னிடம் வாருங்கள் என பலமுறை அறிவுறுத்தி வந்தார்கள்.

இன்று வந்திருக்கக்கூடிய அல்லது வரக்கூடிய நமது விருந்தினர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கட்டளைக்கேற்ப அன்னாரால் நிறுவப்பட்ட தர்பிய்யத் அமைப்பின் மூலம் பலன்

பெறுவதற்காகத்தான் வந்திருக்கிறார்கள்; வருவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் தொடங்கப்பட்ட இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்காக வருகின்றார்கள். வசதியுள்ள ஜமாஅத் சகோதரர்கள் இதில் கலந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே வரக்கூடிய விருந்தினர்கள் இந்த வகையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருந்தினர்கள் ஆவார்கள். மேலும் நமக்கு இது மாபெரும் பெருமையாகும். ஒவ்வொரு பணியாளருக்கும் இது பெருமைக்குரியதாகும். இந்த விருந்தினர்களுக்கு முழுமையாக தொண்டாற்ற வேண்டும். அவர்களுக்கு எவ்வித கஷ்டமும் ஏற்பட்டு விடக்கூடாது. எந்த எதிர்பார்ப்புகளுடன் அவர்கள் இங்கு வருகின்றார்களோ அதனை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள். ஜல்ஸாவிற்கு வரக்கூடிய விருந்தினர்கள், பொதுவாக ஜல்ஸாவிற்காகவும், சில தினங்களுக்காகவும் தான் வருகின்றார்கள். பிறகு திரும்பிச் சென்று விடுகிறார்கள். நான் கூறியது போன்று தலைமையக மாநாடு என்ற காரணத்தினால் உலகின் மூலை முடுக்குகளிலிருந்து மக்கள் வருகிறார்கள்.

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

உங்கள் விருந்தினர்களுக்குரிய உரிமையை வழங்குங்கள். விருந்தினர்களுக்குரிய உரிமை மூன்று தினங்களுக்கான விருந்தோம்பல் ஆகும். சில தினங்களுக்கான விருந்தோம்பல் ஆகும்.

ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களுடைய விருந்தோம்பும் தரம் எவ்வாறிருந்நது? சில தினங்களுக்குரிய விருந்தோம்பலாக இருந்ததில்லை. மாறாக, நிரந்தரமான விருந்தோம்பலாக இருந்தது.

அறிவிப்பில் வருகிறது: அந்த மக்கள் மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதற்காக எல்லா நேரமும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருகில் இருந்தார்கள். இந்த வகையில் அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நிரந்தர விருந்தினர்களாக இருந்தார்கள். அவர்களது தேவைகளை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு கவனித்து வந்தார்கள். அவர்களுக்கு எவ்வாறு விருந்தோம்பல் செய்தார்கள் (என்று பாருங்கள்).

மாலிக் பின் அலி ஆமிர் உடைய நீண்ட அறிவிப்பு ஒன்று உள்ளது. அதில் அவர் கூறுகின்றார். ஒரு மனிதர் தல்ஹா பின் உபைதுல்லாஹ்விடம் சென்றார். அவரிடம் கூறினார்.

ஏ! அபூ முஹம்மது! இந்த அழகிய மனிதர் அதாவது அபூஹுரைரா (ரலி) அவர்களைப் பார்த்ததில்லையா? அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஹதீஸ்களை அதிக அளவில் அறிந்திருக்கக் கூடியவர் ஆவார். அவரிடமிருந்து எங்களுக்கு எப்படிப்பட்ட ஹதீஸ்கள் கிடைத்ததென்றால் அதனை உம்மிடமிருந்து நாங்கள் கேட்டதே இல்லை என்றார். அப்போது அவர் இந்த விசயத்தில் எந்தவித சந்தேகமும் இல்லை என்றார். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து நாங்கள் கேட்காத விசயங்களைக் கேட்டிருந்தார்கள். இதற்குக் காரணம் அவர்கள் ஏழையாக இருந்ததே ஆகும். அவர்களிடம் எதுவும் இருந்ததில்லை. அவர்களது கை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது கையுடன் இருந்து வந்தது. நாங்கள் பல வீடுகளைக் கொண்டவர்களாகவும், பணக்காரர்களாகவும் இருந்தோம். நாங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சில சமயங்களில் காலையிலும், சில நேரங்களில் மாலையிலும் சென்று வந்தோம்.

எனவே இந்த மக்கள் மார்க்கத்திற்கு உலகத்தை விட எந்த அளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்றால், அனைத்தையும் மறந்து விட்டனர். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது நிரந்தர விருந்தினர்களாக ஆகிவிட்டனர். இந்த விருந்தோம்பலைப் பற்றியும், எவ்வாறு விருந்தோம்பல் இருந்தது என்பது பற்றியும், அவர்களது நிலைமை எவ்வாறிருந்தது என்பதைப் பற்றியும் அறிவிப்புகள் உள்ளன. விருந்தினர்கள் எந்த விதமான கோரிக்கையையும் வைத்ததில்லை. மாறாக அவர்கள் வீட்டில் இருந்து வந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தான் விருந்தோம்பல் செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களது அறிவிப்பு ஒன்று உள்ளது. ஒரு சமயத்தில், பல நாட்கள் பட்டினி, பசியால் சோர்வடைந்திருந்தார்கள். இது ஒரு நீண்ட அறிவிப்பாகும். ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவர்களது நிலைமைகளைக் கண்டு வீட்டிற்குச் சென்றார்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களுடன் இருந்தார்கள். வீட்டிற்கு ஒரு குவளை நிறைய பால் அன்பளிப்பாக வந்திருந்தது. அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அபூஹுரைராவிடம், நீங்கள் சென்று திண்ணைத் தோழர்கள் எத்தனை பேர் உள்ளார்களோ,

அவர்கள் அனைவரையும் அழைத்து வாருங்கள் என்றார்கள். இவருக்கு பசியினால் நிலைமை மோசமாக இருந்தது.

கூறுகின்றார்கள்: நான் சென்று அனைவரையும் அழைத்து வந்தேன். பிறகு நாங்கள் அனைவரும் வட்டமாக அமர்ந்திருந்தோம். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்தப் பாலை வலப்பக்கத்திலிருந்து கொடுங்க ஆரம்பியுங்கள் என்றார்கள். இவரே கூறுகின்றார்: நான் பசியினால் எந்த நிலையில் இருந்தேன் என்றால், எனக்கு தான் முதல் உரிமை என நான் நினைத்தேன். நான் பாலைக் கொடுத்துக் கொண்டிருக்கும் போது, ஒரு நபருக்கு பிறகு அடுத்த நபருக்கு கொடுக்கும் போது பால் இப்போது தீர்ந்து விடும். நான் பட்டினியாகத்தான் இருப்பேன் என உள்ளத்தில் தோன்றியது. பசியினால் இப்படிப்பட்ட நிம்மதியின்மை ஏற்பட்டிருந்தது. இருந்தபோதிலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொடக்கத்தில் இரண்டு மூன்று மடக்கு அந்தப் பாடலை அருந்தியிருந்தார்கள். அதில் பரக்கத் ஏற்பட்டிருந்தது; துஆ இருந்தது. பரக்கத்தின் காரணமாக அனைவரும் பாலை அருந்தினார்கள். மார்க்கத்தின் காரணமாக கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அனைத்தையும் தியாகம் செய்த மக்கள் ஆவார்கள். மேலும் நிரந்தர விருந்தினர்களாகவும் இருந்தார்கள்.

இன்று நம்மிடம் இதுபோன்ற நிரந்தர விருந்தினர்கள் எவருமில்லை. ஆனால் மார்க்க நோக்கத்திற்காக மார்க்கத்தினைக் கற்றுக் கொள்வதற்காக வரக்கூடிய விருந்தினர்கள் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள். எனவே இவர்களுக்கு முழுமையான விருந்தோம்பல் செய்வது நமது கடமையாகும். நான் கூறியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் ஜல்ஸாவில் கலந்து கொள்வதை மார்க்க நோக்கமாகத்தான் கூறியுள்ளார்கள். இதன் மூலம் மார்க்கத்தைக் கற்றுக் கொண்டு மார்க்கத்தைப் பெற்று உண்மையான மூஃமினாகவும் முஸ்லிமாகவும் ஆக வேண்டும் (என்பதற்காக வருகின்றார்கள்).

எனவே இந்த விருந்தினர்களுக்கு தொண்டு செய்வது நமது கடமையாகும். இது எதனால் கடமை என்றால், இறைவனது கட்டளையைத் தவிர ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நடைமுறை ஆகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது நடைமுறையின்படி அமல் செய்ய வேண்டும் என்பதும் இறைவனது கட்டளையாகும். நான் கூறியது போன்று இந்தக் காலக்கட்டத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதும் விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்ற மிகப்பெரிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. எனவே இந்த வகையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பணிகள் முழுமை அடைவதற்கு அன்னாருக்கு எல்லா வகையிலும் உதவியாளராக இருப்பது நம் மீது கடமையாகிறது. அதாவது விருந்தோம்பலில் நமக்கு கொடுக்கப்பட்ட பணிகளை நல்ல முறையில் செய்து வர வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய காலத்தின் விருந்தோம்பலின் ஒரு சில சம்பவங்களை எடுத்துரைக்கின்றேன். இதனை ஏற்கனவே கேட்டிருக்கலாம். இருந்தாலும் இதனை ஒவ்வொரு முறை படிக்கும்போதும், ஒரு அழகிய அம்சம், ஒரு புதிய அம்சம் வெளியாகிறது.

பணியாளர்களுக்கு சில சம்பவங்களில் பாடமும் இருக்கிறது. சில சமயங்களில் நேரக் குறைவின் காரணமாக அல்லது வேறெதாவது ஒரு காரணத்தினால் பணிபுரியக்கூடிய பணியாளர் அவசரப்படுவார். குறிப்பாக விருந்தினர் உணவு உண்ணும் போது அவர்களுக்கு முன்னால் ஏதாவது பணியாளர்களிடமிருந்து வெளிப்படும் செயல் விருந்தினர்களுக்கு தவறாகத் தென்படும். அல்லது அப்படி நடப்பது பொருத்தமான நடைமுறையாக இருக்காது. சில சமயங்களில் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் தொடங்கும் போது, ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகப் போகிறது என பணியாளர்கள் அவசரப்படுவார்கள். சாப்பிடக்கூடிய இடங்களில், டின்னருக்குரிய இடங்களில் அங்குள்ள பணியாளர்கள் விருந்தினர்கள் வேகமாக சாப்பிட்டு விட்டு செல்லுங்கள் என்று அவசரப்படுத்துவார்கள். நான் கூறப்போகின்ற சம்பவம் இதில் சாப்பாடு பரிமாறக்கூடிய பணியாளர்களுக்கு விருந்தோம்பலின் ஒழுக்கம் எவ்வாறு இருக்க வேண்டும். தரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பற்றியதாகும்.

**ஹஸரத் மியான் கையிருத்தீன் சாஹிப் ே க்வானி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒருமுறை நடந்த சம்பவமாகும்.**

நான் எனது கிராமம் ே-க்வானியிலிருந்து காதியான் வந்தடைந்தேன். நான் வட்ட அறையின் அருகில் வந்த போது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது சில நண்பர்களுடன் உணவு சாப்பிட்டுக்

கொண்டிருந்தார்கள். நான் உள்ளே சென்று ஸலாம் கூறினேன். அப்போது ஹுஸுர் மிகவும் எழுச்சியுடன் வாருங்கள் மியான் கையிருத்தீன் சாஹிப்! உணவு உண்ணுங்கள் என்றார்கள். நான் ஏற்கனவே சாப்பிட்டு விட்டேன். ஹுஸுர் நான் சாப்பிட்டு விட்டேன் என்றேன். இல்லை. இல்லை சாப்பிடுங்கள் என்றார்கள். நான் உட்கார்ந்தேன். உணவு முடிந்து போய் இருந்தது. மக்கள் சாப்பிட்டு முடித்து விட்டார்கள். ஹுஸுர் அவர்களும் சாப்பிட்டு முடித்திருந்தார்கள். எனினும் எனக்காக ஹுஸுர் அவர்கள் ரொட்டி மற்றும் குழம்பு ஏற்பாடு செய்தார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் சிறிய வயதுடையவராக இருந்தார்கள். அவரும் ஹுஸுருடன் இணைந்து சாப்பிட்டிருந்தார். அவர்களது குழம்பு பாத்திரத்தையும் என் முன்னால் வைத்தார்கள். நான் சாப்பிட ஆரம்பித்தேன். நான் சில கவளம் தான் சாப்பிட்டிருப்பேன். மியான் குலாம் முஹையுத்தீன் சாஹிப் மர்ஹூம் – இவர் முதல் கலீஃபாவின் பால்குடி சகோதரர் ஆவார். அவர் அங்கு வைக்கப்பட்டிருந்த குழம்பு மற்றும் பாத்திரங்களை எடுக்க ஆரம்பித்தார்கள். மேலும் அவசரத்தில் எனக்கு முன்பாக இருந்த பாத்திரத்தையும் எடுத்தார். ஹுஸுர் அவர்கள் இதனைப் பார்த்ததும் மிகவும் கடினமான வார்த்தையில் மியான் குலாம் முஹையுத்தீன் சாஹிபை கண்டித்தார்கள். அவர்கள் மிகவும் வருத்தமடைந்தார்கள். நீங்கள் ஏன் அவர்கள் முன்பு இருந்த பாத்திரத்தை எடுத்தீர்கள் என்றார்கள். நான், ஹுஸுர் அவர்களிடம் பரவாயில்லை என்ற கூறக்கூட சக்தியில்லாதவனாய் இருந்தேன். நான் சாப்பிட்டு விட்டேன். எனது வயிறு நிரம்பி விட்டது. அந்த நபர் எடுத்த பாத்திரத்தை திரும்ப எனக்கு வைத்து விட்டார். நானும் சாப்பிட ஆரம்பித்தேன். நான் கூறும் வரை சாப்பாட்டு விரிப்பை எடுக்கக் கூடாது என்றார்கள். இவர்கள் கடைசியாகக் கூறுகின்றார்கள். நான் சில கவளம் மட்டும் தான் சாப்பிட்டேன். பிறகு சாப்பாட்டு விரிப்பை எடுக்கும்படி கூறினார்கள். பிறகு அது எடுக்கப்பட்டது.

எனவே இது ஒரு சம்பவமாகும். விருந்தினர் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றால் அவரை திருப்தியாக சாப்பிட விட வேண்டும். தொழுகை மற்றும் ஜல்ஸாவிற்கு நேரம் நெருங்கி விட்டால் பணியாளர்களும் அவசரமாய் செயல்படுவார்கள். தர்பிய்யத் பிரிவும் இவர்களை வேகமாக இங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என முயற்சி செய்யும். முதலில் சாப்பிடுவதற்கு போதுமான நேரம் கிடைக்க வேண்டும். பாத்திரம் முன்பாக வந்து விட்டால் திருப்தியாக சாப்பிடுவதற்கு விட்டு விட வேண்டும். மேலும் தொழுகைக்கு இவ்வளவு நேரம் தான் உள்ளது. ஜல்ஸா தொடங்குவதற்கு இவ்வளவு நேரம் தான் உள்ளது என கூற வேண்டும். ஆனால் எவரையும் பின்தொடர்ந்து சீக்கிரம், சீக்கிரம் எழும்புங்கள். நாங்கள் பாத்திரங்களை எடுத்து வைக்க வேண்டும் எனக்கூறி தட்டுகளை எடுக்கக்கூடாது. இதன் மூலம் விருந்தினர்களுக்குரிய உரிமை நிறைவேறாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருந்தோம்பலின் தரம் எவ்வாறிருந்தது? என்பதனை நாம் பார்த்தோம். ஆனால் அன்னாரை ஏற்றுக்கொண்ட மக்களிடம் அன்னார் என்ன எதிர்பார்ப்பை வைத்திருந்தார்கள் என்பதை இன்று நாமும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதனைப் பற்றிய அன்னாரது கூற்றின் மூலம் தெரிய வரும்.

கூறுகின்றார்கள்: எனக்கு எப்போதும், எந்த விருந்தினருக்கும் கஷ்டம் ஏற்பட்டு விடக்கூடாது என்ற கவலை இருக்கிறது. இதற்காக நான் எப்பொழுதும் வலியுறுத்தி வருகிறேன். எவ்வளவு முடியுமோ விருந்தினர்களுக்கு வசதிகள் செய்து தர வேண்டும். விருந்தினரது உள்ளம் கண்ணாடியைப் போன்று மிருதுவானதாகும். சிறியதாக தட்டுப்பட்டாலும் உடைந்து போய் விடும். இதற்கு முன்னர் நான் விருந்தினர்களுடன் சாப்பிட்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். எனது உடல்நிலை மிகவும் மோசமானவுடன் பத்திய சாப்பாடு சாப்பிட வேண்டியதுள்ளது. பிறகு அந்த வழக்கத்தை தொடர முடியவில்லை. மேலும் விருந்தினர்கள் எண்ணிக்கை எந்த அளவு அதிகமாக ஆனது என்றால் இடம் போதுமானதாகயில்லை. எனவே இந்த நிர்பந்தத்தின் காரணமாக தனியாக சாப்பிட நேர்ந்தது. எங்கள் புறமிருந்து அனைவருக்கும் அவர்களது கஷ்டங்களை எடுத்துக்கூற அனுமதி அளிக்கப்படுகிறது. சில மக்கள் நோயாளிகளாக இருப்பார்கள். அவர்களுக்கு தனியாக உணவு ஏற்பாடு செய்ய முடியும்.

இந்தக் கூற்றில் எந்த விசயத்தின் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளார்களோ அவற்றில் இரண்டு முக்கியமான விசயங்கள் உள்ளன. ஒவ்வொரு பணியாளரும் இதனை கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். வெறும் சாப்பாடு பரிமாறக் கூடியவர்கள் மட்டும் கிடையாது. மாறாக, ஜல்ஸாவுடைய ஏற்பாட்டில் ஏதாவது ஒரு வகையில் தொடர்பு கொண்டுள்ள ஒவ்வொருவருக்கும் இதில் அறிவுரை உள்ளது. அன்னார் கூறிய முதல் விசயம்,

முடிந்தவரை விருந்தினருக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். விருந்தினருக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது என்பது வெறும் சாப்பாடு கொடுப்பது மட்டும் கிடையாது. இதில் வரக்கூடிய விருந்தினர் தங்குவதற்குரிய வசதி பற்றியும் கூறப்பட்டுள்ளது. டிராஃபிக் கன்ட்ரோல் மற்றும் பார்கிங் போன்றவற்றில் சிறந்த முறையில் ஏற்பாடு செய்வதன் பக்கமும் கவனமூட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் சில சமயங்களில் விருந்தினர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகின்றன. சில சமயங்களில் புகார்களும் வருகின்றன. வெகு தூரத்திலிருந்து வர வேண்டியதிருக்கிறது. கார்களுக்குரிய பார்கிங் பகுதி தூரத்தில் உள்ளது. அங்கிருந்து நடந்துவர வேண்டியதுள்ளது. பேருந்து வசதி முறையாக செய்யப்படவில்லை. மிகவும் தாமதமாக வருகிறது. இதைப்போன்று குளியல் அறை மற்றும் டாய்லெட் போன்ற ஏற்பாடுகள் நல்ல முறையில் செய்யப்பட்டிருக்க வேண்டும். தூய்மையின் பக்கமும் கவனம் ஏற்பட வேண்டும்.

கடந்த வருடத்தின் குறைபாடுகளை கண்முன் நிறுத்தி இந்த ஏற்பாட்டை செய்ய வேண்டும். டிக்கெட் பரிசோதிப்பதற்கான ஏற்பாடு உள்ளது. பாதைகளில் செல்வதற்குரிய ஏற்பாடு, குறிப்பாக அஹ்மதி அல்லாத விருந்தினர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு மிக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லாத அளவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இதைப்போன்று சிறு குழந்தைகளை வைத்துள்ள தாய்மார்களுக்கு நல்ல ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இதன் மூலம் அவர்கள் சீக்கிரமாக சென்று விட வேண்டும். குறிப்பாக மழை நேரத்திலும், நல்ல வெயில் நேரத்திலும் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இதில் மற்றொரு விசயத்தையும் கூறியுள்ளார்கள். இது அனைவருடனும் தொடர்புடையதாகும். அதாவது விருந்தினர்களின் உள்ளம் கண்ணாடியைப் போன்று மிருதுவானதாகும். எனவே இந்த மிருதுவான உள்ளத்தை கவனத்தில் கொள்வதும் அவசியமாகும். கவனத்தில் வைத்தவாறு தேவைகளை நிவர்த்தி செய்யும் போது பொதுவாக குறைகள் தென்படாது. பிறகும் கூட விருந்தினர் தனது இயல்பின் அடிப்படையில் குறை கூறினார் என்றால் அல்லது முறையில்லாத விசயங்களைக் கூறினால் பணியாளர்களது வேலை பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையுடன் அதனை பொறுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு மேல் எவ்வித பதிலையும் பேசக்கூடாது.

குறிப்பாக செக்யூரிட்டியில் பணிபுரியக்கூடிய பணியாளர்கள் ஒழுங்குமுறையை செயல்படுத்தும் போது அன்பு மற்றும் பாசத்துடன் புரிய வையுங்கள். ஒழுங்குமுறைகளை கண்டிப்பாக ஜல்ஸா நடைபெறும் இடத்திலும் வெளியிலும் கடைபிடிப்பது அவசியமாகும். இன்றைய காலத்தில் செக்யூரிட்டியின் பக்கம் அதிக கவனம் தேவைப்படுகிறது. மேலும் எவருடைய உணர்வையும் பாதிக்காத வகையில் வழிவகை செய்ய வேண்டும். யாரும் தவறாக எண்ணிவிடக் கூடாது. ஏதாவது கஷ்டமான பிரச்சனை என்றால் மேலதிகாரி வரை விசயத்தை எட்ட வைக்க வேண்டும். நீ, நான் என்று கூறி விசயத்தை பெரிதாக்கி விடக்கூடாது. பொதுவாக அஹ்மதி அல்லாத விருந்தினர்களுடன் நல்ல முறையில் தான் நடந்து கொள்ளப்படும். ஆனாலும் சிலரை மக்கள் அறிந்திருக்கமாட்டார்கள். அவர்களுடனும் மிகவும் கண்ணியத்துடன் பரிமாற வேண்டும். இது அனைவருடனும் இவ்வாறு கண்ணியத்துடன் பரிமாறும் போது தான் நடைபெறும். பொதுவாக பலர் ஜல்ஸாவைப் பார்க்க வருகிறார்கள். அவர்கள் உங்களது நல்லொழுக்கங்களை பார்க்கும் போது நல்ல விளைவைப் பெறுகின்றனர். எனவே நல்லொழுக்கம் நல்ல தப்லீக்கும் ஆகும்.

தொடகத்தில் எண்ணிக்கை குறைவாக இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று அவர்களே விருந்தோம்பலின் ஏற்பாட்டை செய்து வந்தார்கள். இவர்களுடன் உணவும் சாப்பிட்டு வந்தார்கள். ஆனால் எண்ணிக்கை அதிகமான காரணத்தால் சில பத்திய உணவு சாப்பிட வேண்டிய காரணத்தால், உடல்நிலையின் காரணமாக தனியாக சாப்பிட்டு வந்தார்கள்.

இப்போது அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் எண்ணிக்கை பெருகி விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பிரதிநிதியாக காலத்தின் கலீஃபாவுக்கு இவ்வாறு கூட உட்கார்ந்து சாப்பிடுவது அல்லது ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் நேரடியாக கவனத்தில் கொள்வது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். மேலும் பல பணிகள் உள்ளன. விருந்தினர்களை சந்திப்பதும் ஒரு பணியாகும். மற்ற பணிகளும் உள்ளன. எனவே அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறையும் முடிந்த அளவு விருந்தினர்களுக்கு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். தனது பொறுப்பை முழு உணர்வுடன் நிறைவேற்ற வேண்டும். காலத்தின் கலீஃபாவுக்கு பணியாளர்கள் மீது நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக ஒவ்வொரு

பணியாளரும் செயல்பட வேண்டும். பணியாளர்கள் விருந்தினர்களின் உரிமையை சரியாக நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே ஒவ்வொரு பணியாளரும் தனது உயரிய நல்லொழுக்கங்களை வெளிப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இது மிகவும் அவசியமாகும். வரக்கூடியவர்களுக்கு இவர்கள் காலத்தின் கலீஃபாவின் அருகில் இருக்கிறார்கள். எனவே இவர்களது எல்லா தரமும் உயர்ந்திருக்கும் என எண்ணுவார்கள். அவ்வாறு இருக்கவும் வேண்டும். இபாதத்துகளின் தரமும் நன்மையின் தரமும் நல்லொழுக்கத்தின் தரமும் உயர்ந்திருக்க வேண்டும்.

எனவே ஒவ்வொரு பணியாளரும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். மாறாக தொழுகை மற்றும் இபாதத்துகளின் பக்கமும் கவனம் தொடர்ந்து இருப்பது குறிப்பாக இன்றைய நாட்களில் மிகவும் முக்கியமானதாகும். பொதுவாக இது முக்கியமானதாகும். குறிப்பாக இதற்கான ஏற்பாடுகள் இருக்க வேண்டும். இதனைப் போன்றே மற்ற நன்மைகளின் பக்கமும் கவனம் இருக்க வேண்டும். உயரிய நல்லொழுக்கம் இருக்க வேண்டும். இது ஒரு பொறுப்பாளராக இருக்கக் கூடியவருக்கு மற்றும் ஜமாஅத்தில் பணிபுரியக் கூடிய ஒரு பணியாளருக்கு எப்போதும் இருக்க வேண்டிய ஓர் அம்சமாகும். மேலும் ஜல்ஸாவின் நாட்களில் இது புதுப்பொலிவுடன் வெளிப்பட வேண்டும்.

நான் அறிவுரை கூறக்கூடிய இந்த நேரத்தில் ரப்வாவின் ஜல்ஸாவின் காட்சிகள் கண்முன் வருகின்றன. அங்கு ஜல்ஸாக்கள் நடைபெறும் போது, காலத்தின் கலீஃபா மூலமாக ஜல்ஸாவுக்கு முந்தைய ஜுமுஆவில் அறிவுரை கூறப்பட்டு வந்தது. ரப்வாவில் வசிக்கக்கூடிய ஒவ்வொரு அஹ்மதியும் அவர் தொண்டு செய்வதற்காக தனது பெயரைக் கொடுத்திருந்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி இந்த அறிவுரையின்படி அமல் செய்து வந்தனர். முழுமையான முயற்சிகளுடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக அங்கு ஜல்ஸாக்கள் நடைபெறுவதில்லை. ரப்வாவின் அஹ்மதிகளையும் பாகிஸ்தானின் அஹ்மதிகளையும் துஆவில் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் அவர்களது குறைகளையும் நிவர்த்தி செய்வானாக!

நான் கூறியது போன்று இங்கிலாந்து ஜமாஅத் விருந்தோம்பலின் உரிமையை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்கிறது என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஒவ்வொரு பணியாளரும் இதற்குரிய உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்கிறார். ஒரு காலம் இருந்தது. அப்போது U.K. ஜமாஅத் ஆண்டு மாநாட்டின் ஏற்பாடுகளைச் செய்வதற்கான சக்தி மற்றும் தகுதியில்லை என்று கூறப்பட்டது. தலைமையகத்திலிருந்து நான்காவது கலீஃபாவின் ஹிஜ்ரத்தின் ஆரம்ப காலத்தில் இந்த ஏற்பாட்டினைச் செய்வதற்கு உதவிகள் பெறப்பட்டு வந்தது. அங்கிருந்து சில பொறுப்பாளர்களும், மேலதிகாரிகளும் வந்தனர். அவர்கள் உங்களுக்கு உதவி செய்து வந்தார்கள். ஆனால் தற்போது அல்லாஹ்வின் அருளால் மேலதிகாரிகளும், பணியாளர்களும் தர்பிய்யத் பெற்றவர்களாக உள்ளனர். சிறந்த முறையில் பணிகளை செய்து முடிக்கக் கூடியவர்கள் ஆவர். இந்த வகையில் இந்த குறைபாடு நீங்கி விட்டது. ஆனால் இந்தக் குறைபாடு நீங்கியதன் காரணமாக, சிறந்த முன்னேற்றத்தின் காரணமாக, நல்ல திறமை பெற்றதன் காரணமாக ஒவ்வொரு பொறுப்பாளரிடமும் ஒவ்வொரு பணியாளரிடமும் மேலும் அதிக அளவு தன்னடக்கம் ஏற்பட வேண்டும். இதன் பக்கம் எப்போதும் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ்வின் அருளால் ஆண்டு மாநாட்டின் மேலதிகாரிகளிடமிருந்து ஒவ்வொரு நாளும் வரக்கூடிய அறிக்கையிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், மா-ா அல்லாஹ் மிகவும் நுட்பமாக சென்று ஒவ்வொரு விசயத்தின் பக்கமும் கவனம் செலுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணிகளும் நடக்கின்றன. அல்லாஹ் ஒவ்வொரு பணியாளருக்கும் சிறந்த முறையில் தனது டியூட்டியினை செய்வதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! ஆண்களுக்கும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

இங்கு நான் இந்த விசயத்தையும் கூற விரும்புகின்றேன். நான் கூறியதுபோன்று இன்றைய காலகட்டத்தின் சூழ்நிலையின் காரணமாக செக்யூரிட்டியின் பக்கம் அதிக கவனம் கொடுக்கப்பட்டு வருகிறது. இது மிகவும் முக்கியமான விசயமாகும். இதில் எந்த விதமான குறைவையும் ஏற்படுத்த முடியாது. இதில் விட்டுக்கொடுத்துப் போக முடியாது. அவ்வாறு போகவும் கூடாது. மேலும் இதனுடன் மற்றவர்களின் உணர்வுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. அவர்கள் ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்காக வருகின்றார்கள். செக்யூரிட்டி பணியாளர்கள் சட்டத்தை ஒருபோதும் கையில் எடுக்கக் கூடாது.

பிரச்சனைகள் வந்தால் அதனை ஹிக்மத்துடனும் கவனத்துடனும் சரிசெய்ய வேண்டும். இந்த சா்ந்தா்ப்பத்தில் தன்னுடன் மற்ற விருந்தினா்களை அழைத்து வரக்கூடிய அஹ்மதிகளிடம் அழைத்து வர விரும்புபவா்களிடம் அல்லது அதற்கான ஏற்பாடுகளை செய்யக்கூடிய அஹ்மதிகளிடம் நான் இதனை கூற விரும்புகின்றேன். அதாவது எந்த விருந்தினரை அழைத்து வர வேண்டுமோ அவா்களைப் பற்றி ஆரம்பத்திலேயே கூறிவிட வேண்டும். ஏற்பாட்டாளா்களுடன் பிரச்சனையை சரிசெய்து விட வேண்டும். பிறகு இதன் மூலம் விருந்தினா்களை அழைத்து வரக்கூடிய அஹ்மதிகளுக்கு எந்த குறையும் கூற வேண்டியது இருக்காது. இல்லை என்றால் செக்யூரிட்டி செக்கிங் மிக அதிகமாக இருந்தது. கலந்து கொள்வதிலிருந்து நாங்கள் தடுக்கப்பட்டோம். மிக நீண்ட நேரமாகி விட்டது. அல்லது மேலும் சில காரணங்களால் மறுக்கப்பட்டோம் என்றெல்லாம் பிரச்சனைகள் வரும். இப்படிப்பட்ட நிலையில் வரக்கூடிய விருந்தினா்களுக்கு கஷ்டமும் தா்மசங்கடமான நிலையும் ஏற்பட்டு விடும்.

எனவே இந்த விசயத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அறியாத மக்களிடம் அதிகமான சோதனைகள் செய்ய வேண்டியது வரும். எனவே யாரை உடன் அழைத்து வர விரும்புகின்றீா்களோ அவரைப் பற்றி முதலிலேயே தகவல் தெரிவித்து விட வேண்டும். அதுவும் அதற்கான ஏற்பாடு இங்கு இருக்கும் போது தான் செய்ய வேண்டும். மேலும் இங்குள்ள செயல்பாட்டின் படி ஒவ்வொரு அஹ்மதியும் கடக்க வேண்டும். இந்த வழிகாட்டல் பணியாளா்களுக்குரியது கிடையாது. இருந்தாலும் இந்த வழிகாட்டல்களுடன் இதனையும் கூற வேண்டிய அவசியம் இருந்தது. ஏனென்றால் இந்த வேலை முதலிலேயே நடைபெற்றிருக்க வேண்டும். தற்போது ஒரு வாரம் உள்ளது. யாராவது ஏதாவது விருந்தினா்களை உடன் அழைத்து வர விரும்பினால் அதற்கான ஏற்பாட்டினைச் செய்யுங்கள். ஏனென்றால் பிறகு எனக்கு கடிதங்களும் இதனைப் பற்றி வருகின்றன. அமைப்பின் சாா்பாக யாராவது மறுக்கப்பட்டால் மக்கள், அமைப்பின் நிா்பந்தத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். குறை கூறக் கூடாது.

மேலும் ஏற்பாட்டாளா்களும் மிகவும் ஹிக்மத்துடன் தீா்வு காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் யாருக்கும் எந்த குறையும் ஏற்படக் கூடாது. இதுதான் உயரிய நல்லொழுக்கம் ஆகும். இதனைத்தான் நாம் வெளிப்படுத்த வேண்டும். மேலும் இதனையும் தெளிவாக கூற விரும்புகின்றேன். அஹ்மதியல்லாத விருந்தினா்களை அழைத்து வரக்கூடிய அஹ்மதிகள் பொதுவான நிலைமையும் குறிப்பாக ஜமாஅத்தைப் பற்றி சில பிரிவுகளின் எண்ணங்களையும் நிலைமைகளையும் பாா்க்கும் போது தீமை விளைவிப்பவா்கள் மிகவும் துடிப்புடன் செயல்படுகிறாா்கள். பாதிப்பை ஏற்படுத்துவதற்கு சில சமயங்களில் முயற்சிகளும் நடைபெறுகின்றன. எனவே அஹ்மதி அல்லாதவா்களை விருந்தினா்களாக அழைத்து வரக்கூடியவா்கள் ஆரம்ப காலத்தின் தொடா்பு அல்லது ஓரளவு தெரிந்த நபா் என்ற வகையில் அவா்கள் விருந்தினா்களாக அழைத்து வர வேண்டாம். இந்த விசயத்தில் வெகுளியாக இருக்காதீா்கள். மாறாக எல்லா வகையிலும் திருப்தி ஏற்பட்ட பின்னா், பழைய தொடா்புள்ளவா்களை விருந்தினா்களாக அழைத்து வருவதாக இருந்தால் அழைத்து வாருங்கள். அதுவும் நான் கூறியது போன்று முதலில் அமைப்புடன் தொடா்பு கொண்டு, எல்லா விசயங்களையும் சரி செய்து விட்டு பிறகு அழைத்து வாருங்கள்.

இறுதியில் மீண்டும் இந்த விசயத்தின் பக்கம் கவனமூட்டுகின்றேன். விருந்தினா்களுக்கு குறிப்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவா்களுடைய விருந்தினா்களுக்கு உபசரிப்பு செய்வதனை இறை அருள் எனக் கருதுங்கள். இதற்காக முதலில் இருந்ததை விட அதிக உணா்வுடன் தனது தொண்டுகளை செய்யுங்கள். அல்லாஹ் அனைத்து பணியாளா்களுக்கும் இதற்கான வாய்ப்பினை வழங்குவானாக! எல்லாவற்றையும் விட அதிகமாக துஆவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுங்கள். அல்லாஹ் மாநாட்டை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக்குவானாக! அனைத்து ஏற்பாடுகளும் குறித்த நேரத்தில் நிறைவு பெற வேண்டும். மேலும் அனைத்துப் பிரிவிலும் பணியாளா்கள் நல்ல முறையில் பணிபுரிபவா்களாகட்டுமாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAITUL FUTUH MOSQUE, LONDON.
**ON 31.08.2012**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456